# ● காமினியின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கு வழங்கப் பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளது என பி. பி. ஸி. தெரிவித்தது.

மத்திய மாகாணசபை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர சூத்திரதாரியாக இவர் செயற்பட்டதால் இவரது பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டிருக்கி

4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 13 இதழ் 316
யாழ்ப்பாணம் புதன் கிழமை 29-12-1993

## முல்லை. குண்டு வீச்சில் 5 பொதுமக்கள் பலி

(கொழும்பு)

முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள அளம்பில் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் பலியானதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

மேற்படி தாக்குதலில் பொதுமக்கள் பலியானது பற்றி பாதுகாப்பு பகுதியினருக்கு தெரிவிக்கப்பட்டபோது விடுதலைப்புலிகள் இந்த குறிப்பிட்ட இடத்தில் கூடியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்த காரணத்தினாலேயே அங்கு விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனத்தெரிவிக்கப்பட்டது. -இ.ரி

★ வடக்கு — கிழக்கு பிரச்சினை தீர அரசு

# தமிழர்மீது தீர்வை திணிக்காது

# புலிகளோடு பேச வேண்டும்

## 'அமைதிக்கான பாதை' கருத்தரங்கில் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்னைக்கு தீர்வு கான, தமிழர் மீது தீர்வை திணிக்காது அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று கொழும்பில் நடைபெற்ற 'அமைதிக்கான பாதை' கருந்தரங்கில் கலந்துகொண்ட பௌத்த மதகுரு ஒருவர் உட்பட சிங்கள தமிழ் பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## எல்லா அரசியல் கட்சிகளும் அமைதியை கோரவேண்டும்

— திஸ்ஸ பாலசூரிய

(கொழும்பு)

போர் மூலம் எந்தத் தீர்வும் ஏற்படாது என்பதைக் கடந்த 10 வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் சண்டை காட்டுகிறது என்று 'அமைதிக்கான பாதை' கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய சமூக சமயமைப்பைச் சேர்ந்த கத்தோலிக்க குரு அருட்திரு. திஸ்ஸ பாலசூரிய தெரிவித்தார்.

நாங்கள் தமிழர்களை ஒரு தீவிர நிலைக்குத் தள்ளினோம். மக்களைக் கொல்லவோ அழிக்கவோ எங்களால் முடியாது. நிலம், வீடமைப்பு, கல்வி, பாதுகாப்பு போன்ற துறைகளில் தமிழர்களுக்குப் பிரச்னை இருக்கிறது என்பதை ஐக்கிய தேசியக்கட்சி 1977ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒப்புக்கொண்டு அளித்த வாக்

(4ம் பக்கம் பார்க்க

## மலையகத்தில் தொண்டமான் மின்னல்வேகசுற்றுப்பயணம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், உல்லாசப் பயணத்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் மலையகத்தில் மின்னல்வேக பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இ.தொ.கா.வின் நிலையை ஸ்திரப்படுத்தும் விதமாகவே அவர் மலையகத்தின் மூலை முடுக்கெல்லாம் சுற்றுப்பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் பொதுக் கூட்டங்கள் மூலம் மக்களைச் சந்திப்பதுடன், கிளை அமைப்பாளர்களையும், தலைவர்களையும் சந்தித்துப் பேசிவருகிறார்.

மத்திய மாகாணசபையில் இ.தொ.கா. அங்கத்தவர்கள் 7 பேர் நடந்துகொண்ட முறை தவறானது எனவும் இதை அனுமதிக்கமுடியாது

(4ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.வுடனான உறவுபற்றி முடிவு எடுக்கப்படும்

(கொழும்பு)

மத்திய மாகாணசபையின் கடத்தப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏழு உறுப்பினர்கள் சம்பந்த

(4ம் பக்கம் பார்க்க)

## ஏழு உறுப்பினர்களும் பதவிநீக்கம் என அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழு பேரும் எதிர்வரும் 15ம் திகதி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவ வரைபடத்திற்கு வெளிநாட்டு உதவி

(கொழும்பு)

இராணுவத்திற்கு தேவையான வரைபடங்களை வெளிநாட்டுவரைபட நிபுணர்களைக் கொண்டே தயாரிக்கவேண்டுமென பாதுகாப்பு வட்டாரங்கள் காணி அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளன.

இதுவரைகாலமும் இராணு

(4ம் பக்கம் பார்க்க)

## புத்தளம் பகுதியில் பாதுகாப்பு தீவிரம்

(புத்தளம்)

புத்தளம் பகுதியில் விடுதலைப்புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக அப்பகுதியைப் பலப்படுத்தும் முயற்சியில் சிறிலங்கா படையினர் ஈடுபட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் பீரங்கித் தாக்குதல்

### அதிர்ச்சியால் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பகுதியில் நேற்றுக்காலை மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித்தாக்குதலை நடத்தினர்.

நேற்றுக்காலை 6 30 மணியளவில் வல்வெட்டித்துறை தொண்டமனாறு கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் பீரங்கி மற்றும் ஹெலிகொப்டர் தாக்குதல்கள் மேற்கொண்டார்கள் சுமார் அரை மணிநேரமாக இத்தாக்குதல் இடம் பெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி—பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன் கிழமை மட்டும் வழமையான நேரத்திற்கு நடைபெறுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பில் கடும் மழை போக்குவரத்து துண்டிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை தொடர்ந்து பெய்து வருவதினால், மட்டுநகருக்கு செல்லும் போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டதாக, மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு ஆர். மௌனகுருசாமி நேற்று கொழும்புக்கு அவசர செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

தமது மாவட்டத்தில் கடும் மழை தொடர்ந்து பெய்துவருவதினால் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தினால் 30ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி அகதிகளாக பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும். மற்றும் பொது இடங்களிலும் தங்கியுள்ளார்கள். 60 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகள் முற்

(4ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### விற்பனைக்கு

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஆக்கிய மாணவர்களுக்கான மாண்புறு கதைகள்: விநியோகம்: நவநீதிருத்தி எங்கும் கிடைக்கும். (வி-672)

### ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர்

1994 ஆம் ஆண்டுக்கான ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் வெளிவந்துவிட்டது. நாள், திதி, யோகம், நட்சத்திரம், விடுமுறை நாட்கள், கோயில் விழாக்கள் முதலிய பல விபரங்களும் அடங்கியது. விலை ரூபா 30/- மட்டுமே. ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம். (ஏ-3692)


## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய ஆட்டத்தில் 'பி' பிரிவில் ஹென்றிஸ் எதிர் அரியாலை 'ஏ' பிரிவில் ஞானமுருகன் எதிர் சென். அன்ரனிஸ் அணிகள் மோதுகின்றன. -சி

# போராட்ட வரலாறுகள் நூலுருப் பெறவேண்டும்

— புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

எமது போராட்ட வரலாறுகள் நூல் உருவில் வெளிவரவேண்டும். எமது வருங்கால சந்ததிகள் இந்த வரலாற்று நூல்களைப் புரட்டிப் பார்க்க வேண்டும். எமது மானத்தமிழ் மறவன் சங்கிலியன் வரலாறு நாநூறு வருடங்களுக்கு மேலானது போல் எமது போராட்ட வடிவங்களையும் வரலாறுகளையும் எமது வருங்கால சந்ததியினர் புரட்டிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற 'சொர்க்கனின்' ஆக்கமான மானத் தமிழ் மறவன் (சங்கிலியன் கூத்து) வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்: தலைவன் ஒருவன், அவன் தலைமையின்கீழ் எல்லோரும் ஒன்றுகி கடல்போலத் திரண்டுவிட்டால் எதையும் எளிதில் சாதித்துவிடலாமென்ற கருத்துக்களை சொர்க்கன் தனது ஆக்கத்தில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ இளங்குமரன் பேசுகையில்; இந்த நூலின் கருப்பொருளாக வந்திருக்கும் சங்கிலியன் இன்றைய சூழ்நிலையில் எமது மக்களை எல்லாம் எழுச்சியுறச் செய்கிறார். எமது இனத்துக்காக, எமது மண்ணுக்காக போராடிய வீரன் சங்கிலியன்.

தமிழன் சாருக்கும் அடிமையில்லை வீரம் பொருந்திய வன், எதனையும் சாதிக்கக் கூடிய ஆற்றல் வல்லமை பெற்றவன் என்றும் அவர் தனதுரையில் தெரிவித்தார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு யாழ் இலக்கியவட்டத் தலைவர் திரு. து. வைத்திலிங்கம் தலைமை வகித்தார். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்தினார். -162-சி

# சந்தையில் மரக்கறி விலைகள் அதிகரிப்பு

(உடுவில்)

சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயம் நாற்பது ரூபா வரை விலை உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ 20 ரூபாவாக விற்பனையாகி வந்த வெங்காயம் மழை காரணமாக விலை தற்போது அதிகரித்துள்ளது.

கடந்த வாரங்களில் மரக்கறிகளின் விலையில் ஏற்றம் காணப்படுகின்றது. ஒருகிலோ மிளகாய் நூறு ரூபா வரை விற்கப்படுகின்றது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 60 ரூபாவாகவும், வெண்டிக்காய் 50 ரூபாவாகவும், பயிற்றங்காய் 70 ரூபாவாகவும், தக்காளிப்பழம் 80 ரூபாவாகவும் சந்தையில் விற்கப்படுகின்றது.

வாழைப்பழத்தின் விலையில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ கதலிப்பழம் 7ரூபாவாகவும் கப்பல் பழம் 15ரூபாவாகவும், இதரைப்பழம் 15 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது.

காற்றினால் அதிகளவு வாழைமரங்கள் முறிந்துவீழ்ந்தமையே வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. -109

## வெள்ள நிவாரணம்

(அரியாலை)

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வாரமும் அரிசி, மீன்டின், தேயிலை, பருப்பு ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. -59

## ஸ்ரீ ரமண பகவான் 115 வது ஜயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

ஆத்ம தத்துவ ஞான விசாரணையின் ஆரம்ப கர்த்தாவாகிய பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் 115-வது ஜயந்தி தினம் நாளை வியாழக்கிழமை 10 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் தத்துவஞான நூலாசிரியர் திரு. த. சத்தியதாஸன் தலைமையில் நடைபெறும். அன்றைய தினம் பூஜைகளும், ஆராதனைகளும் இடம்பெறும்.


## தேவை

திறமை, ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள்

**பாதுகாப்பு சேவைக்கு தேவை**

கூட்டுப்படையில் இருந்து இளைப்பாறியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சகல விபரங்களுடனும் 31-12-93ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: எ 3686,
C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம். (எ 3686)

## அறிவித்தல்

1994ம் ஆண்டுக்கு "ஈழநாடு" நிறுவனத்திற்கு மண்ணெண்ணெ, என்ஜின் ஒயில், மரக்கறி எண்ணெ, பத்திரிகை அச்சடிக்கும் தாள் விநியோகிப்பதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் விலை விபரங்களுடன் 10-1-94க்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

ஈழநாடு நிறுவனம்
63, சிவன் கோவில் மேற்குவீதி,
யாழ்ப்பாணம். (எ-3709)

## யாழ். வர்த்தகர் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1994

யாழ். வர்த்தகர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவும் 1994-ம் ஆண்டு தை மாதம் 21-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

சகல துறை வர்த்தக உரிமையாளர்களும் நேரில் சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

மாவட்ட அரசியல்துறை முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள்.

சங்கத்தில் இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளத் தவறியவர்கள்; மாதாந்த சந்தாப் பணம் 1993 மார்கழி வரை செலுத்தத் தவறியவர்கள் தயவு செய்து சங்கப் பணிமனையுடன் உடன் தொடர்பு கொண்டு தங்கள் உறுப்புரிமையை உறுதி செய்து கொள்ளவும்.

நன்றி

வே. சிற்சபேசன், தலைவர் — நா. த. அன்னலிங்கம், செயலாளர்

21, மேல்மாடி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம் (ஏ-3713)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### விஞ்ஞான பீடம்

1992/93ம் கல்வி ஆண்டிற்கு விஞ்ஞான பீடத்தில் பௌதீகவியல்-உயிரியல் கற்கை நெறிகளுக்கு தங்களைப் பதிவு செய்து கொண்ட எல்லா மாணவர்களுக்கும் 1994-01-03 ஆம் திகதி தொடக்கம் கணனி விஞ்ஞான ஆரம்பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாக உள்ளது. எனவே மேற்படி நெறிகளுக்கு தங்களைப் பதிவு செய்து கொண்ட சகலரும் 1994-01-03ம் திகதி வகுப்புகளுக்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

முதலாம் வருடத்தில் கணனி விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்க விரும்புபவர்களது தெரிவு இந்த ஆரம்ப கணனி விஞ்ஞான வகுப்புக்களின் முடிவில் நடைபெறவிருக்கும் தகுதிகாண் பரீட்சையில் இருந்தே செய்யப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

பதிவாளர்.

(ஏ 3714)

## பாடசாலை மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

மலரப்போகும் புத்தாண்டிலிருந்து சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய "டெயாட்டா கோஸ்டர்" பஸ் வண்டியொன்று மல்லாகத்தில் இருந்து கேப்படி மகளிர் பாடசாலைச் சந்தி, யாழ். நகர் வரை பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

பணம் செய்ய விரும்புவோர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:—

★ மது புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

★ பவித்திரா பேஷன் கவுஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★ நித்தியா ஸ்பொட், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

★ சிக்கோ காட்வெயர், கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி.

★ தாசன் ஸ்ருடியோ, கே. கே. எஸ். வீதி, இணுவில். (எ-3715)

யாழ். மாவட்ட
நல்லூர் திரிசாரணர் குழு
10ம் ஆண்டு நிறைவு
மலர் வெளியீட்டிற்காக
200க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதிய
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின்
'இலங்கைவேந்தன்' பங்குபற்றும்

## "போர் முரசம் கேட்கிறது"

(நாடகம்)

அருணாவின்

### "இசை மாலை"

இடம்: இளங் கலைஞர் மண்டபம் (சட்டநாதர் வீதி, நல்லூர்)

காலம்: இன்று புதன் மாலை 6 மணி

அனைவரும் திரண்டு வந்து
ஆதரவு தாரீர்!

நல்லூர்த் திரிசாரணர் குழு.

விழா சிறப்புற வாழ்த்தும்

★ **பகவான் மருந்தகம்**

221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3716)

# இந்திய அமைச்சரவையில் விரைவில் பெரும் மாற்றம்

## நரசிம்மராவ் திட்டம்

(புதுடில்லி)

இந்திய அமைச்சரவையில் விரைவில் பெரும் மாற்றங்களைச் செய்வதற்கு, பிரதமர் நரசிம்மராவ் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சரவையில், தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. பி. சிதம்பரம் முக்கிய பதவி வகிக்கக் கூடுமென்றும், அண்மையில் தமது பதவியை ராஜினாமாச் செய்த நிதியமைச்சர் திரு. மன்மோகன்சிங் மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப் படலாம் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை தற்போதைய அமைச்சர்களில் பலர் தமது பதவிகளை இழக்கக்கூடும் என்றும், குறிப்பாகத் தற்போதைய வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஷ்சிங்கும், எரிபொருள் அமைச்சர் அஜே சர்மாவினதும் பதவிகள் பறிபோகலாமென்றும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. -ரி

## பஸ் விபத்தில் 36 பேர் பலி

(பிறேசில்)

தென் அமெரிக்காவின் பிறேசில் நகரில் பஸ் ஒன்று கார் மீது மோதி ஆழ பாதாளத்தில் வீழ்ந்ததில், 36 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 40க்கும் அதிகமானோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பஸ்ஸில் 80 பயணிகள் பயணம் செய்ததாகத் தெரியவருகிறது. உ-ரி

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பத்து ஆண்டு காலமாக நடந்து கொண்டிருக்கும் இனப்போருக்கு முடிவு கட்ட சமாதான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போருக்கும் இனப்பிரச்சினைக்கும் சமாதான தீர்வு காணும் விடயத்தை அரசியல்வாதிகளிடமும் அரசியல் கட்சிகளிடமும் விட்டுவிட முடியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான இக்கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

தமிழ்பேசும் மக்களிடம் எந்தத் தீர்வும் திணிக்கப்படக்கூடாது ஆனால் போர் நிறுத்தப்படவேண்டும், புலிப்படையினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என பெரும்பான்மைசிங்கள பௌத்தர்கள் வாழும் தென்மாகாணத்தைச் சேர்ந்த புத்த பிக்கு பக்தகம சமித்ததேரோ இக்கருத்தரங்கில் குரலெழுப்பினார்.

சாதாரண மக்களுக்கு இந்தப் போர் தேவையற்றது. தமிழ்மக்களின் கோரிக்கைகளையும் தமிழர்கள் படும் துன்பதுயரங்களையும் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டியகாலம் வந்துவிட்டது. இதுதான் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாக இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (ரி)

### மட்டக்களப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக வெள்ளத்தில் மூழ்கிவிட்டன.

களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, ஓட்டமாவடி ஆகிய பிரதேசசெயலகப் பிரிவுகளே அதிகளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இப்பகுதிகளிலுள்ள பாதைகளில் வெள்ளம், 6 அடிக்குமேல்பாய்வதினால், போக்குவரத்து பாதைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவுப்பொருட்களை அனுப்பிவைக்கும்படி, அரச அதிபர் திரு. மௌனகுருசாமி நேற்று கொழும்புக்கு அனுப்பிய அவசர செய்தியில் கேட்டுள்ளார். (வி-ரி)

### காமினியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலாம் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கடந்த மே மாதம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டபின் நாட்டின் அரசியல் தலைவர்களின் பாதுகாப்பை அரசு அப்போது பலப்படுத்தியது.

அந்தச் சமயத்தில் திரு. காமினி திஸநாயக்காவுக்கும் அவரது பாதுகாப்புக்கென பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இவருக்கு உதவி பொலிஸ் அதிகாரி ஒருவரும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் இரண்டு பொலிஸ்கான்ஸ்டபிள்கள் ஆயுதங்களுடன் பாதுகாப்பு வழங்கி வந்தனர்.

திரு. காமினி திஸநாயக்காவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு எதற்காக நீக்கப்பட்டதென பொலிஸ் வட்டாரங்களை கேட்டபோது அது உயர்மட்டத்திலிருந்து வந்த ஒரு உத்தரவு என மாத்திரம் பதிலளிக்கப்பட்டது. (இ-ரி)

## அறிவியல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

'நங்கூரம்' நடத்தும் விடுமுறைக்கான அறிவியல் அரங்கு, இன்று யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திரு. இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்வறிவியல் அரங்கில், யாழ் மாவட்டத்தில் உள்ள 100 மாணவர்கள் பங்குபற்றுவார்கள். -ரி

### மலையகத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், போராடிப் பெற்ற எந்த மலையக மக்களின் உரிமைகள் இதனால் பாதிக்கப்படும் எனவும், எம்மைக் காட்டிக்கொடுக்கும் இவர்களுக்கு எதிராக அணி திரண்டு அவர்களுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிக்கவேண்டும் என்றும், சென்ற இடமெல்லாம் அமைச்சர் தொண்டமான் சூழுரைத்தார். இ-ரி

### ஏழு உறுப்பினர்களும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் தமது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவ தாக இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஆனால் திரு. தொண்டமான் தெரிவித்ததன்பேரில் நாம் எமது உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய முடியாதென அந்த ஏழு அங்கத்தவர்களும் தெரிவித்துள்ளனர். -இ

### ஐ. தே. க.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக இ. தொ. கா. அதன் நிர்வாகக்குழு கூட்டத்திலும் பொதுச்சபை கூட்டத்திலும் முடிவு ஒன்றை எடுக்க தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 2ம் திகதிஅடெனில் இ.தொ.காவின் மேற்படி கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

அரசாங்கத்துடன் இ.தொ.கா என்ன விதத்தில் இனி செயல்படப்போகிறது என்பது சம்பந்தமான முடிவும் இந்தக் கட்டத்தில் மேற்கொள்ளப்படும். (இ-ரி)

### புத்தளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தளம், எலிபன்ற்குளம், மன்னார் வரையிலான பகுதிகளிலுள்ள சிங்கள கிராமங்களுக்கு படையினரால் பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் தொடக்கம் மன்னார் வரையிலான கரையோரப்பகுதி சிங்களமீனவர்களை பாதுகாப்புடன் கடற்றொழிலுக்குச் செல்லுமாறு பொலிஸார் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதனிடையே புத்தளம் பகுதியில் தமிழர்கள் பெருமளவில் கைது செய்யப்படுவதுடன் கெடுபிடிகளும் மேற்கொள்ளப்படுகின்றது. அண்மையில் அப்பகுதியில் முப்பது தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி)

## வெள்ளத்தினால் மூன்று லட்சம் பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர்

(கொழும்பு)

கடந்த சில வாரங்களாக பெய்துவரும் பெருமழை காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் மூன்று லட்சத்து 75 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தமது வீடுகளைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளுடன், வடமத்திய மாகாணமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளே இந்த வெள்ளப் பெருக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் 32 ஆயிரத்து 320 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 18 ஆயிரத்து 372 குடும்பங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இ-ரி

## வன்னியில் புதுவகை காய்ச்சல் இரு சிறுவர்கள் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் மற்றும் வன்னிப் பெருநிலப் பரப்பில் ஒருவகை காய்ச்சல் நோய் பரவிவருவதையடுத்து புதுமுறிப்பு, செல்வாநகர் பகுதியில் இரு சிறுவர்கள் மரணமாகியுள்ளனர்.

வட்டக்கச்சியில் நீரளிவு நோய்க்கு 11 வயது சிறுமி ஈான கார்த்திகா என்பவர் மரணமானார். உரிய சிகிச்சைகளை அளிக்க தவறியதாலும் வீட்டுவைத்திய முறைகளை பின்பற்றி தவறான மருந்து வகைகளை கொடுத்தமைக்காகவும்கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் பெற்றோர் எச்சரிக்கை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (83)

### இராணுவ

1-ம் பக்கத் தொடர்ச்சி

வத்துக்கு தேவையான வரைபடங்களை சிறிலங்காவின் நில அளவையாளர்களும் வரைபட நிபுணர்களுமே தயாரித்து வந்தனர். ஆனால் இவர்களின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு ராணுவ நகர்வுத் திட்டங்களும் முகாம்களின் வரைபடங்களும் செல்வதாகவும் இதன்மூலம் தங்களின் முகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்படுவதுடன் ராணுவ நடவடிக்கைகளும் தோல்விகளை தழுவிக்கொள்வதாக கூறியே காணி அமைச்சுக்கு இவ்உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து காணி அமைச்சு இராணுவத்துக்கு தேவையான வரைபடங்களை தயாரிப்பதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை நாடியுள்ளது. -ரி

## தையல் பயிற்சி நிலையம்

(மானிப்பாய்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப்பிரிவு பண்ணையத்தில் தையல்பயிற்சி நிலையமொன்றை திறந்து வைத்துள்ளது.

### வடமராட்சி கடலில்

1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடைபெற்றதை அடுத்து மீனவர்கள் தமது படகுகளுடன் கரைக்குத் திரும்பினர்.

படையினர் நடத்திய இத்தாக்குதலின்போது அதிர்ச்சியினால் வயோதிபர் ஒருவர் பலியானார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே அதிர்ச்சியால் மரணமானவராவார். (ரி)

### எல்லா அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறுதிகளையும் அவர் நினைவூட்டினார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்ற ஜனாதிபதி விஜேதுங்காவின் கருத்தை அவர் வன்மையாக எதிர்த்தார்.

நிறைவேற்று அதிகாரம் பெற்ற அதிகாரங்களை நீக்கும் மற்றும் தன்னாட்சி அமைப்பை அர்த்தமுள்ளதாக்கும் அரசியல் சாசன திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என அவர் குரல் எழுப்பினார்.

அவசர காலச்சட்டத்தின் கீழ் அரசு நாட்டை ஆள்வதை நிறுத்த வேண்டும் என்றும் இந்தப்பிரச்சினைக்கு இன்றைய அரசியல்தலைமையே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் கட்சிகள் எதிர் வரும் தேர்தல் பிரசாரங்களுக்காக தத்தம் கொள்கை விளக்க ஏடுகளை வரையும் போது நாம் அமைதியை நாடுகின்றன என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெயதேவ உயாங்கொட பூநகரித் தாக்குதலுக்குப் பின் பின்போர் மீண்டும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

வெளிநாட்டு தலையீட்டால் பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது போன்ற அண்மைக்கால உதாரணங்களிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நகரத்தின் அர்த்தம் எல்லோர் மீதும் நெருக்கு கொடுக்க கூடிய தமிழர்கள் சிங்களவர்கள், முஸ்லிம்கள் சேர்ந்த மக்கள் அமைதி இயக்கம் ஒன்று தொடக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரிட்டிஷ் அரசுக்கும் ஐ. ஆர். ஏக்கும், ஐ. ஆர். ஏ. யின் அரசியற்பிரிவுக்கும் இடையிலே நடந்த பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தையும் பிரிட்டனுக்கும் அயர்லாந்திற்கும் இடையிலே அண்மையிலேற்பட்ட உடன்படிக்கை பற்றியும் இலங்கை அரசு உன்னிப்பாக ஆராய வேண்டும் என்று கூறினார். கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சரவணமுத்து.

இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் போர் குறித்து இலங்கை அரசின் அதிகாரபூர்வமான நிலையில் பெரும் முரண்பாடுகள் இருப்பதாக டாக்டர் நீலன் திருச்செல்வம் கூறினார்.

இந்தப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதைவிட பெரிய கடமையேதுமில்லையென 1993 மே மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளிடம் பிரதமர் கூறியதையும், இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என ஜனாதிபதி கூறிவருவதையும் சுட்டிக்காட்டிய அவர் வடபுலத்தின் அவல நிலை பற்றியும் இக்கருத்தரங்கில் விளக்கினார்.

இந்தக்கருத்தரங்கில் உரையாற்றிய அனைவரும் அமைதி, சமாதானத்தில் மட்டுமே நாட்டின் விமோசனம் தங்கியுள்ளது என்பதை வலியுறுத்தினார்கள். (ரி)


## மலிவு விற்பனை

நத்தார்-புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு

1-12-93 முதல் 31-12-1993 வரை

எமது நிலையத்தில் சகல விதமான புடவை வகைகளையும், தைத்த ஆடை வகைகளையும்

மலிவு விலையில் விசேட கழிவுடன்

பெற்றுக் கொள்ளலாமென வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

லண்டன் புடவை நிலையம்

249, மின்சார நிலைய வீதி

யாழ்ப்பாணம்

(எ-3629)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனியாருக்காக யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10 386/B: